

# FAST FACTS

## DAILY CURRENT AFFAIRS

## தினசரி நடப்பு நிகழ்வுகள்


**21 March 2023**





STAR POLICE ACADEMY









# STAR POLICE ACADEMY
NO. 1 POLICE ACADEMY IN TAMIL NADU

## TARGET காக்கிசட்டை ★★ 2023

DAILY CURRENT AFFAIRS FOR

**TNUSRB, TNPSC, RRB, SSC & BANKING**

★ ★ Admission Going on ★ ★ ★ ★ ★

TNUSRB, SI TALUK, AR, TSP,
FINGER PRINT SI,TECHINICAL SI, PC,
AGNIPATH, CRPF.



SPECIALIZED PHYSICAL TRAINING FOR ALL THE DEFENCE SERVICES

FREE MOCK INTERVIEW SESSIONS FOR SUB INSPECTOR (SI)





BOTH ONLINE / OFFLINE CLASSES ARE AVAILABLE

HOSTEL FACILITIES FOR BOTH BOYS & GIRLS



STAR POLICE ACADEMY







# TAMIL NADU








1. மகளிருக்கு ரூ.1,000 உரிமைத் தொகை வழங்கும் திட்டம் செப்டம்பர் 15-இல் தொடங்கப்படும் என்று தமிழக நிதிநிலை (2023-24) அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

- இதற்காக, ரூ.7,000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது

நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை
அமைச்சர் **பழனிவேல் தியாகராஜன்**

2. ஏழைமக்களின் சொந்த வீட்டுக் கனவை நனவாக்கும் வகையில், பத்திர பதிவுக் கட்டணத்தை 4 சதவீதத்தில் இருந்து 2 சதவீதமாக குறைக்கப்படும்.

## நிதி அறிக்கையின் முக்கிய அம்சங்கள்:-

- ✓ தகுதி வாய்ந்த குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1,000 உரிமைத் தொகை
- ✓ சென்னை, தாம்பரம், ஆவடி உள்பட 7 நகரங்களின் முக்கிய இடங்களில் வை-ஃபை இணைய வசதி.
- ✓ கோவை, மதுரையில் மெட்ரோ ரயில்திட்டம்
- ✓ மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.30,000 கோடி வங்கிக் கடன்
- ✓ சேலத்தில் ரூ.880 கோடியில் புதிய ஜவுளிப் பூங்கா.
- ✓ மொழிப்போர் தியாகிகள் தாளமுத்து, நடராஜன் ஆகியோருக்கு சென்னையில் நினைவிடம்.
- ✓ தமிழ்க் கணினி பன்னாட்டு மாநாடு நடத்தப்படும்.
- ✓ சங்கமம் கலை விழா, எட்டு முக்கிய நகரங்களுக்கு விரிவுபடுத்தப்படும்.

- ✓ தஞ்சாவூரில் மாபெரும் சோழர் அருங்காட்சியகம் அமைக்கப்படும்.
- ✓ சென்னை கிண்டியில் நிகழாண்டில் கலைஞர் நினைவு பல்நோக்கு மருத்துவமனை திறக்கப்படும்.
- ✓ தொழிலாளர்களின் நலன்காக்க, ஆலைகளில் மருத்துவ பரிசோதனைத் திட்டம் செயல்படுத்தப்படும்.
- ✓ பள்ளிகளுக்கு ரூ.1,500 கோடியில் புதிய உள்கட்டமைப்பு வசதிகள். வரும் ஆண்டிலும் சர்வதேச புத்தகக் காட்சி நடத்தப்படும்.
- ✓ ஆதிதிராவிடர் உள்பட பிற துறைகளின் பள்ளிகள், பள்ளிக் கல்வித் துறையின் கீழ் கொண்டு வரப்படும்.

- ✓ மதுரையில் கலைஞர் நூலகம் ஜீன் மாதம் திறக்கப்படும்.
- ✓ சென்னை அம்பத்தூரில் உலகளாவிய புதுமை முயற்சி மற்றும் திறன் பயிற்சிமையம் அமைக்கப்படும்.
- ✓ தொழிற்சாலைகளில் திறன் பயிற்சிகள் அளிக்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.
- ✓ சென்னையில் அதிநவீன விளையாட்டு நகரம் உருவாக்கப்படும்.
- ✓ தாழ்த்தப்பட்டோர் பொருளாதாரத்தை உயர்த்த அம்பேத்கர் பெயரில் தொழில் திட்டம்.
- ✓ அயோத்திதாசர் பெயரில் ரூ.1,000 கோடியில் குடியிருப்பு மேம்பாட்டுத்திட்டம்.

STAR POLICE ACADEMY

- ✓ பெண்களுக்கான பிரத்யேகமாக சிறப்பு தொழில் இயக்கம். ரூ.2,000 கோடியில் தமிழ்நாடு நெய்தல் மீட்சி இயக்கம்.
- ✓ ஈரோடு மாவட்டத்தில் பெரியார் பெயரில் வனவிலங்கு சரணாலயம்.
- ✓ மரக்காணத்தில் பன்னாட்டுப் பறவைகள் மையம்.
- ✓ 10,000 சிறிய நீர்நிலைகள் குளங்கள் ரூ.800 கோடியில் புதுப்பிப்பு.
- ✓ ரூ.7,145 கோடியில் ஒகேனக்கலில் 2-வது கூட்டுக் குடிநீர் திட்டப் பணி.
- ✓ ரூ.1,500 கோடியில் அடையாறு ஆறு மறுசீரமைப்புப் பணி.
- ✓ சென்னை தீவுத் திடலில் திறந்தவெளி திரையரங்கம் உட்பட புதுமை வசதிகள்
- ✓ ரூ.320 கோடியில் சென்னையில் வெள்ளத் தடுப்புப் பணிகள் ஆயிரம் கோடி ரூபாயில் வடசென்னை வளர்ச்சித்திட்டம்.

- ✓ சென்னை தேனாம்பேட்டை - சைதாப்பேட்டை இடையே 4 வழிப் பாதை மேம்பாலம்.
- ✓ சென்னையில்உள்ள முக்கிய பேருந்து பணிமனைகள் மேம்படுத்தப்படும்.
- ✓ ரூ.500 கோடியில் 1,000 புதிய பேருந்துகள் வாங்கப்படும்.
- ✓ காற்றாலைகள் செயல் திறமைக்க புதிய கொள்கை
- ✓ 10 இடங்களில் சிறிய கைத்தறிப் பூங்காக்கள்.
- ✓ புதிய துணி நூல் கொள்கை விரைவில் வெளியிடப்படும்.
- ✓ அடுத்த ஆண்டு ஜனவரி 10, 11-ஆம் தேதிகளில் உலக முதலீட்டாளர் மாநாடு.
- ✓ ஈரோடு, செங்கல்பட்டு, நெல்லையில் புதிய I.T. பூங்காக்கள்.
- ✓ சுற்றுலாக் கொள்கை விரைவில் வெளியீடு.

STAR POLICE ACADEMY

1. ஆதிதிராவிட மக்களுக்காக ரூ.1,000 கோடியில் ஆயோத்திதாச பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம்.
   - ❖ஆதிதிராவிடர் - பழங்குடியின மாணவர்களின் மொத்த உயர் கல்விச் சேர்க்கையை அதிகரிக்கவும், அவர்களுக்குப் பாதுகாப்பான, தரமான தங்குமிட வசதிகளை வழங்கவும், மதுரை, கோயம்புத்துதூர், திருச்சி, நீலகிரியில் அந்த மாணவர்கள் பயன் பெறும் வகையில் 4 புதிய விடுதிகள் நவீன வசதிகளுடன் ரூ.100 கோடி செலவில் கட்டப்படும்.

## 2. தொழில்முனைவோர் திட்டம்:-

ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின தொழில் முனைவோரின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில், வரும் நிதியாண்டிலிருந்து, "அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம்" என்னும் புதிய திட்டம் செயல்படுத்தப்படும்.

- இந்த திட்டத்தின் மூலம் இயந்திரங்களையும், கருவிகளையும் கொள்முதல் செய்வதற்காக 35 சதவீத மூலதன மானியமும் 6 சதவீத வட்டி மானியமும் வழங்கப்படும். இந்தத் திட்டத்துக்காக ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- நகர்ப்புற பகுதிகளிலும் ஊரகப் பகுதிகளிலும் ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை உறுதி செய்து, முழுமையான சமூக-பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த அயோத்திதாச பண்டிதர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். இந்தத் திட்டம் வரும் 5 ஆண்டுகளில் ரூ.1,000 கோடியில் செயல்படுத்தப்பட உள்ளது.

STAR POLICE ACADEMY

3. சென்னையில் சீரான, சமமான வளர்ச்சியை உறுதி செய்ய வட சென்னை வளர்ச்சித்திட்டம், என்ற செயல் திட்டம் ரூ.1,000 கோடியில் அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் செயல்படுத்தப்பட உள்ளது. இந்தத் திட்டத்தில், கட்டமைப்பு பற்றாக் குறைகளையும் வளர்ச்சி குறியீடுகளின் குறைபாடுகளையும் கண்டறிந்து. அவற்றைக் களைய நடவடிக்கை எடுக்கப்படும். இந்தத் திட்டம் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் நிதியையும் நடைமுறையிலுள்ள திட்டங்களையும் ஒருங்கிணைத்து செய்ல்படுத்தப்படும்.

4. வட்டார மேம்பாடு : மாநிலத்தின் அனைத்து வட்டாரங்களும் வளர்ச்சியடையும் வகையில், "வளமிகு வட்டாரங்கள்" என்ற புதிய திட்டம் தொடங்கப்பட உள்ளது, அதன்படி. மலைப்பகுதிகள் உள்பட மாநிலத்தில் மிகவும் பின்தங்கிய 50 வட்டாரங்கள் கண்டறியப்பட்டு, ஒவ்வொன்றிலும் தலா ரூ.5 கோடி மதிப்பிலான திட்டப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

5. ரூ.2,000 கோடியில் "நெய்தல் மீட்சி இயக்கம்" திட்டம்

❖ கடல் மாசுபாட்டைக் குறைத்து, அதன் சூழலைப் பாதகாப்பதற்காக ரூ.2,000 கோடியில் தமிழ்நாடு நெய்தல் மீட்சி இயக்கம் திட்டம் செயல்படுத்தப்படும்.

6. பருவநிலை மாற்றத்தின் தாக்கத்தாலும், மக்கள்தொகைப் பெருக்கத்தாலும் கடலோர சுற்றுச்சூழலும், கடலோர மக்களின் வாழ்வாதாரமும் வருங்காலங்களில் கடுமையாக பாதிகப்படக்கூடும்.

❖ இதைக் கருத்தில் கொண்டு கடல் அரிப்பைத் தடுக்கவும், கடல் மாசுபாட்டைக் குறைக்கவும், கடல்சார் உயிரியல் பன்முகத்தன்மையைப் பாதுகாக்கவும், 'தமிழ் நாடு நெய்தல் மீட்சி இயக்கம்' என்ற திட்டத்தை ரூ.2,000 கோடியில் உலக வங்கி நிதியுதவியுடன் அடுத்த ஐந்து ஆண்டுகளில் தமிழக அரசு செயல்படுத்த உள்ளது.

STAR POLICE ACADEMY

STAR POLICE ACADEMY

## 7. செயற்கை பவளப் பாறைகள்:-

- கடலுக்குள் வளரும் பவளப்பாறைகள் மீன் வளத்தைப் பெருக்கி அதைப் பாதுகாக்கின்றன. நாட்டுப் படகு மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த, பாக் நீரிணைப் பகுதியை ஒட்டிய 3 மாவட்டங்களில் கடற்பகுதியில் 217 செயற்கை பவளப்பாறை அலகுகள் ரூ.79 கோடியிலும், பிற மாவட்டங்களில் 200 செயற்கை பவளப்பாறை அலகுகள் ரூ.64 கோடியிலும் மத்திய, மாநில அரசுகளின் நிதியுதவியுடன் அமைக்கப்படும்.

8. “தந்தை பெரியார் வனவிலங்கு சரணாலயம்” ஈரோட்டில் 80,567 ஹெக்டேர் பரப்பில் அமைகிறது.

- அழிந்து வரும் வன உயிரினங்களைக்காக்க ஒருங்கிணைந்த வனப்பரப்பு அவசியம். எனவே, நீலகிரி உயிர்க்கோள காப்பகத்தை, தென்காவிரி வனவிலங்கு சரணாலயத்துடன் இணைக்கும் வகையில், ஈரோடு மாவட்டத்தில் உள்ள அந்தியூர், கோபி செட்டிபாளையம் வட்டங்களில் உள்ள 80,567 ஹெக்டேர் வனப்பரப்பில் ‘தந்தை பெரியார் வனவிலங்கு சரணாலயம்’ என்ற பெயரில் புதிய சரணாலயம் அமைக்கப்படும.
- இது தமிழகத்தின் 18-ஆவது வனவிலங்கு சரணாலயமாகும்.

## 9. பன்னாட்டு பறவை மையம்

❖ மத்திய ஆசியாவின் பறவைகள் வலசைப் பாதையில் தமிழகம் அமைந்துள்ளதால், ஒவ்வோர் ஆண்டும் பெரும் எண்ணிக்கையில் பறவைகள் நமது மாநிலத்துக்கு வருகை தருகின்றன. பறவைகளின் பாதுகாப்பை உறுதி செய்யவும், பறவையியல் ஆராய்ச்சியை ஊக்குவிக்கவும், இயற்கையில் விழிப்புணர்வை ஏற்படுத்தவும். மரக்காணத்தில்

## 10. மகளிருக்கு மின் ஆட்டோ:-

➢ மகளிர் சுயஉதவிக் குழுக்களின் மூலம் காலநிலை மாற்ற விழிப்புணர்வு பிரச்சார திட்டம் தொடங்கப்படவுள்ளது. சுற்றுச்சூழல் கால நிலை மாற்றம் குறித்த விழிப்புணர்வைப் பரப்பும் பணிகளில் முதல் கட்டமாக 500 மகளிர் சுய உதவிக் குழுக்கள் பங்கெடுக்க உள்ளன.

➢ இதற்காக, அவர்களுக்கு ரூ.20 கோடியில் மின் ஆட்டோக்கள் வழங்கப்படம். இந்த வரவு-செலவுத் திட்டத்தில் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றத் துறைக்கு ரூ.1.248 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**11. 7 மாநகராட்சிகளில் இலவச வைஃபை சேவை ஈரோடு, செங்கல்பட்டில் I.T. பூங்கா**

STAR POLICE ACADEMY

- சென்னை உள்பட 7 மாநகராட்சிகளின் முக்கிய பொது இடங்களில் இலவச வைஃபை சேவைகள் வழங்கப்படும் என்றும், ஈரோடு, செங்கல்பட்டில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.
- முதல் கட்டமாக சென்னை, தாம்பரம், ஆவடி, கோவை, மதுரை, திருச்சி, சேலம் மாநகராட்சிகளின் முக்கிய பொது இடங்களில் இலவச வைஃபை சேவைகள் வழங்கப்படும்.
- உலக அளவில் தகவல் தொழில்நுட்பத் துறையில் தமிழகத்தை ஒரு மக்கிய மையமாக நிலைநாட்டுவதற்கும். பெருகி வரும் அலுவலகக் கட்டடமைப்புத் தேவைகளை நிறைவு செய்வதற்கும் சென்னை, கோவை, ஒசூரில் தமிழ்நாடு தொழில்நுட்ப நகரங்களை (T.N.டெக்சிட்டி) அமைக்கப்படும்.

- தகவல் தொழில்நுட்பம், உலகளாவிய திறன் மையங்கள். நிதிநுட்பம், புதுமைத் தொழில் நிறுவனங்கள் செயல்பட திறன்மிகு மையங்கள், புதுமைத் தொழில் காப்பகங்கள், வர்த்தக மையங்கள், பொழுதுபோக்கு வசதிகள் போன்ற அனைத்து கட்டமைப்புகளும் இந்தத் தொழில்நுட்ப நகரங்களில் ஏற்படுத்தப்படும்.
- **தகவல் தொழில்நுட்ப பூங்காக்கள்:** தகவல் தொழில்நுட்பத் துறையின் வளர்ச்சிக்காக தற்போது ஏழு மாவட்டங்களில் நியோ-டைடல் பூங்காக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.
- இதன் தொடர்ச்சியாக, ஈரோடு, திருநெல்வேலி, செங்கல்பட்டில் தலா ஒரு லட்சம் சதுரடி கட்டடப் பரப்பளவில் தகவல் **தொழில் நுட்பப் பூங்காக்கள்** அமைக்கப்படும்.
- இதன் மூலம் சுமார் **4,000 பேருக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.**

STAR POLICE ACADEMY

12. **தாளமுத்து, நடராசன் நினை விடம்:-** ஹிந்தி எதிர்ப்பு போராட்டத்தில் உயிர் நீத்த மொழிப்போர் தியாகிகளான தாளமுத்து, நடராசன் ஆகியோரின் பங்களிப்பைப் போற்றும் வகையில் சென்னையில் நினைவிடம் அமைக்கப்படும்.
13. **‘தமிழ்க்கணினி பன்னாட்டு மாநாடு’ நடத்தப்படும்.** தமிழ் மொழியில் பெருமளவில் மென்பொருள்கள் உருவாக்கப்படுவதை இது ஊக்குவிக்கும்.
14. **அம்பேத்கர் நூல் மொழி பெயர்ப்பு:-**
    - அம்பேத்கரின் சிந்தனைகளைப் பரப்புவதற்காக, அவரது படைப்புகள் தமிழில் மொழி பெயர்க்கப்படும். இதற்காக அரசால் ரூ.5 கோடி மானியமாக வழங்கப்படும்.

15. நமது தாய்மொழிக்கு ஆற்றிய அளப்பரிய பங்களிப்பினை கருத்தில் கொண்டு அகவை முதிர்ந்த தமிழ் அறிஞர்களுக்கு கட்டணமில்லா பேருந்துப் பயண அட்டையை அரசு வழங்கி வருகிறது. வரும் ஆண்டில் மேலும், 591 அகவை முதிர்ந்த தமிழ் அறிஞர்களுக்கு இச்சலுகையை அரசு வழங்கும்.

16. கடல் வழி பயணங்கள் ஊக்குவிப்பு:-

- கடல் தாண்டி கொடிநாட்டிய தமிழர் பெருமை கூறும் பண்பாட்டு விழுமியங்களை எழுத்தியம்பும் வகையில், தமிழர் பண்பாட்டுத் தலங்களை இணைக்க தமிழ்ப் பண்பாட்டுக் கடல்வழிப் பயணங்கள் ஊக்குவிக்கப்படும்.

STAR POLICE ACADEMY

17. **சங்கமம் கலை விழா,** வரும் ஆண்டில் மேலும் எட்டு முக்கிய நகரங்களுக்கு விரிவுபடுத்தப்படும்.

- நாட்டுப்புறக் கலைகளையும் கலைஞர்களையும் பேணி வளர்ப்பதற்கும், தமிழ் மக்களின் பண்பாட்டு விழுமியங்களின் பகிர்வினைக் கொண்டாடுவதற்கும் நல்வாய்ப்புகளை இந்த விழாக்கள் ஏற்படுத்தியும் வகையில், தமிழர் பண்பாட்டுத் தலங்களை இணைக்கும் தமிழ்ப் பண்பாட்டு கடல்வழிப் பயணங்கள் ஊக்குவிக்கப்படும்.
- சங்கமம் கலை விழா, வரும் ஆண்டில் மேலும் எட்டு முக்கிய நகரங்களுக்கு விரிவுபடுத்தப்படும்.

18. **நாட்டுப்புறக்கலைப் பயிற்சி மையம்:-**

- நாட்டுப்புறக் கலைகளைப் பாதுகாக்கவும், இந்தப் பண்பாடு தொடர்ந்து வருங்காலங்களிலும் செழித்தோங்கவும், தமிழகம் முழுவதும் 25 பகுதி நேர நாட்டுப்புறக் கலைப் பயிற்சி மையங்கள் அமைக்கப்படும்.

STAR POLICE ACADEMY

## 19. சோழர் அருங்காட்சியம்

- தமிழரின் கலை, இசை, கட்டடக்கலை, சிற்பக்கலை, கைவினை, நடனம் உள்ளிட்ட அனைத்தத் துறைகளும் சோழர் காலத்தில், புகழ் உச்சத்தை அடைந்து பாரெங்கும் பரவின.
- உலகாண்ட சோழர்களின் பங்களிப்பைப் போற்றவும், அந்தக் கால கலைப் பொருள்கள், நினைவுச் சின்னங்களைப் பதுகாக்கவும்.
- தஞ்சாவூரில் மாபெரும் சோழர் அருங்காட்சியகம் ஒன்று அமைக்கப்படும்.

## 20. குடிமைப் பணித் தேர்வு எழுதுவோருக்கு ஊக்கத்தொகை.

STAR POLICE ACADEMY

- மாணவர்களுக்கு பட்ட பயிற்சி மற்றும் பயிற்சிப் பொருள்கள் வழங்கும் திட்டத்தை அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியுடன் இணைந்து தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் செயல்படுத்தும்.
- ஒவ்வோர் ஆண்டும் மதிப்பீட்டுத் தேர்வு மூலம் 1,000 மாணவர்கள் தேர்வு செய்யப்படுவார்கள். தேர்வு செய்யப்பட்ட மாணவர்கள் முதல் நிலை தேர்வுக்குத் தயாராவதற்காக மாதத்துக்கு ரூ.7,500 வீதம் 10 மாதங்களுக்கு ஊக்கத் தொகை வழங்கப்படும்.
- முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெறுவோருக்கு ரூ.25,000 ஊக்கத்தொகையாக வழங்கப்படும், இந்தத் திட்டத்துக்காக ரூ.10 கோடி ஒதுக்கப்படுள்ளது.

21. **சென்னையில் உலகளாவிய விளையாட்டு நகரம்.**

- உலகளாவிய அதிநவீன விளையாட்டு நகரம் சென்னையில் - அமைக்கப்படும்.
- சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் மூலம் சென்னையில் ஓர் உலகளாவிய அதிநவீன விளையாட்டு நகரத்தை தமிழக அரசு அமைக்கும்.

22. **நேரு விளையாட்டு அரங்கம் சீரமைப்பு:-**

- ரூ.25 கோடி மதிப்பீட்டில் நவீன விளையாட்டு வசதிகளுடன் சென்னை ஜவாஹர்லால் நேரு திறந்தவெளி விளையாட்டு அரங்கத்தை விரிவாகச் சீரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

STAR POLICE ACADEMY

## 23. புதுமை முயற்சிகள் மற்றும் திறன் பயிற்சி மையம்:-

- சென்னை அம்பத்தூரில் தமிழ்நாடு உலகளாவிய **புதுமை முயற்சிகள் மற்றும் திறன் பயிற்சி மையம்** அமைக்கப்படும்.
- தொழிற்சாலைகளில் திறன் பள்ளிகள் என்ற இத்திட்டத்துக்காக இந்த ஆண்டில், ரூ.25 கோடி வழங்கப்பட்டுள்ளது.

## 24. காமராஜர் கல்லூரி மேம்பாட்டுத் திட்டம்:-

- இத்திட்டம் கடந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் மூலம் அரசு கல்லூரிகளில் கட்டமைப்பு, அடிப்படை வசதிகள் ரூ.1,000 கோடி செலவில் 5 ஆண்டுகளில் மேம்படுத்தப்படவுள்ளன.

STAR POLICE ACADEMY

**25. ஜவுளிப்பூங்கா:-**

- சேலத்தில் ரூ.880 கோடியில் ஜவுளிப் பூங்கா
- மத்திய - மாநில அரசுகளின் நிதியுதவி, தனியார் தொழில் முனைவோர்களின் பங்களிப்புடன் இந்தப் பூங்கா அமைக்கப்படவுள்ளது.
- தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் (சிப்காட்) மூலம் விருதுநகர் மாவட்டத்தில் சுமார் ரூ.1,800 ஜவுளிப் பூங்கா அமைக்கப்படும்.

**26. 10 சிறிய கைத்தறிப் பூங்காக்கள்:-**

- கைத்தறிப் பொருள்களின் தரத்தை உயர்த்தவும் நவீனத் தொழிலநுட்பங்களைப் பயன்படுத்தவம் சந்தைப்படுத்தும் வாய்ப்புகளை ஏற்படுத்தவும் ரூ.20 கோடியில் 10 சிறிய கைத்தறிப் பூங்காக்கள அரசால் நிறுவப்படும்.

STAR POLICE ACADEMY

## 27. SIMPLE GOV திட்டம்

- பொது மக்களுக்கு அனைத்து சேவைகளையும் மின்னணு முறையில் வழங்க SIMPLE GOV திட்டம் செயல்படுத்தப்படும்.
- இந்த முயற்சியின் ஒரு பகுதியாக பல்வேறு அரசுத் துறைகளின் நடைமுறைகளையும், சேவைகளையும் கணினிமயமாக்கும் பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன.

## 28. மின் - ஆளுகை நிதி:-

- மென்பொருள்களை குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் உரிய தர நிலைகளுடன் உருவாக்குவதற்காக ரூ.100 கோடி மதிப்பில் மின் -ஆளுகை நிதி ஏற்படுத்தப்படும்.
- இந்த நிதி அரசுத் துறைகளால் மேற்கொள்ளப்படும் மின-ஆளுகை முயற்சிகளுக்குப் பயன்படுத்தப்படும்.

STAR POLICE ACADEMY

## 29. ஒருங்கிணைந்த மின்னணு கட்டமைப்பு

- உயர்தர இணைய இணைப்பை ஏற்படுத்தவும் குறைந்த விலையில் பல்வேறு மின் சேவைகளை வழங்கவும் 'ஒருங்கிணைந்த மின்னணு கட்டமைப்பு' அரசால் அமைக்கப்படும்.
- இதன் மூலம் மாநில தலைமையகத்திலிருந்து அனைத்து மாவட்டங்களுக்கும் அதிவேக கண்ணாடி இழைக்கற்றை வலையமைப்பு (ஆப்டிக்கல் ஃபைபர் நெட்வொர்க்) உருவாக்கப்படும்.

## 30. கலைஞர் நினைவு பல்நோக்கு மருத்துவமனை:-

- நடப்பாண்டில் கிண்டி கிங் நோய் தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவன வளாகத்தில் அமைக்கப்பட்டு வரும் 1.000 படுக்கை வசதி கொண்ட 'கலைஞர் நினைவு பல்நோக்கு மருத்துவமனை' திறக்கப்படும்.

31. எண்ணும் எழுத்தும் திட்டம்:-

- 2025-ஆம் ஆண்டுக்குள் ஒன்று முதல் மூன்றாம் வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் அனைவரும் அடிப்படை கல்வியறிவும் எண்கணிதத் திறனும் அடைவதை நோக்கமாகக் கொண்டு எண்ணும் எழுத்தும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- நிதிநிலை அறிக்கையில் பள்ளி கல்வித்துறைக்கு ரூ.40,299 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

32. சாலைகள் மேம்பாடு:-

- அடுத்த இரண்டு ஆண்டுகளில் 10,000 கி.மீ தொலைவுக்கு சாலைகளின் தரத்தை மேம்படுத்தி, ஊரகப் பகுதிகளில் சிறப்பான சாலை வசதிகளையும், பொருளாதார மேம்பாட்டையும் உறுதி செய்ய முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.
- அதன் கீழ், முக்கியமான இணைப்புச் சாலைகள், பேரூராட்சி சாலைகள் தரம் உயர்த்தப்படும்.

STAR POLICE ACADEMY

# SPORTS NEWS

STAR POLICE ACADEMY



1. அமெரிக்காவில் நடைபெற்ற இண்டியன் வெல்ஸ் மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டியில்

✓ஸ்பெயின் இளம் வீரர் கார்லோஸ் அல்கராஸ், கஜகஸ் தானின் எலனா ரைபாகினா ஆகியோர் சாம் பயின் பட்டம் வென்றனர்.

✓ஆடவர் ஒற்றையர் பிரிவில், போட்டித்தர வரிசையில் முதலிடத்தில் இருந்த அல்கராஸ், 5-ஆம் இடத்திலிருந்த ரஷியாவின் டேனியல் மெத்வதெவை தோற்கடித்தார்.

2. ரைபாகினா, இண்டியன் வெல்ஸ் போட்டியில் உலகின் நம்பர் 1,2 இடத்திலிருந்தோரை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்ற முதல் வீராங்கனை என்ற சாதனையைப் படைத்துள்ளார்.

➢அவர் அரையிறுதியில், போலந்தின் இகாஸ்வியாடெக்கையும் (1), இறுதிச்சுற்றில் சபலென் காவை (2) சாய்த்திருக்கிறார்.

# QUESTION & ANSWER

STAR
POLICE
ACADEMY



1. பிரதமர் நரேந்திர மோடி 2023 மார்ச் 18 அன்று எந்த இடத்தில் உலகளாவிய தினை மாநாட்டை தொடங்கி வைத்தார்?

புதுதில்லியில்

- ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை (UNGA) 2023 ஆம் ஆண்டை சர்வதேச தினை ஆண்டாக (IYM) அறிவித்துள்ளது.
- ஐ.நா. பொதுச்சபை தலைமையகம்: நியூயார்க், அமெரிக்கா

2. உலகளாவிய பயங்கரவாதக் குறியீட்டில் இந்தியாவின் தரவரிசை என்ன?

13-வது

- உலகளாவிய பயங்கரவாதக் குறியீடு என்பது பொருளாதாரம் மற்றும் அமைதிக்கான நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட வருடாந்திர அறிக்கை.

3. சர்வதேச மகிழ்ச்சி தினம் எந்த நாளில் கொண்டப்படுகிறது?

2003 முதல் மார்ச் 20

STAR POLICE ACADEMY

4. பாக் ஜலசந்தியை மிக வேகமாக நீந்தி சாதனை படைத்து யார்?

சம்பண்ண ரமேஷ்

5. சமீபத்தில் இந்தியாவுக்கான புதிய அமெரிக்க தூதராக நியமிக்கப்பட்டவர் யார்?

எரிக் கார்செட்டி

6. வியாஸ் சம்மன் 2022 விருதைப் பெற்றவர் யார்?

டாக்டர்.கியான் சதுர்வேதி

- இந்தி எழுத்தாளர்
- பகல்கானா நாவலுக்கு K.K.பிர்லா அறக்கட்டளை 1991 ஆம் ஆண்டு சிறந்த ஹிந்தி இலக்கியத்துக்காக ஆண்டு தோறும் வியாஸ் சம்மனை நிறுவியது.

7. சர்வதேச யோகா திருவிழா 2023 எந்த இடத்தில் நடைபெற்றது?

ரிஷிகேஷ் (உத்தர்கண்ட்) மார்ச் 1 முதல் மார்ச் 7, 2023 வரை.

STAR POLICE ACADEMY

8. வட இந்தியாவின் முதல் அணுமின் நிலையம் எந்த இடத்தில் கட்டப்பட உள்ளது?

ஹரியானா (கோரக்பூர்)

9. கேட்ச் த ரெய்ன் 2023 பிரச்சாரம் எந்த திட்டத்துடன் தொடர்புடையது?

ஸ்வச் பாரத் மிஷன்

10. ஆஹர் 2023: ஆசியாவின் மிகப்பெரிய சர்வதேச உணவு மற்றும் விருந்தோம்பல் கண்காட்சி எந்த இடத்தில் நடைபெற்றது?

டெல்லியில்

11. இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் விமான கண்காட்சி மற்றும் விமான கண்காட்சி, ஏரோ இந்தியா 2023, எந்த இடத்தில் நடைபெற்றது?

பெங்களூரில் உள்ள யெலஹங்கா விமானப்படை நிலையம்

STAR POLICE ACADEMY

STAR POLICE ACADEMY

NO.1 POLICE ACADEMY IN TAMILNADU

Plot 85, 206/A, Anandham Nagar,
Vellore Main Road, Sripuram.

FOR CONTACT

87783 12156, 93634 59430

தேர்வில் வெற்றிபெற வாழ்த்துக்கள்